# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்



பதிப்பாசிரியர்கள்

**முனைவர் க. முருகேசன்**

**முனைவர் சு. இராமலிங்கம்**

# ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் : கலையும் கருத்தியலும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. இராமலிங்கம்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | ஜூலை, 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் - 641029. |
| கணினி அச்சாக்கம் | : | **பிரடாக் பிரிண்ட்,**<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | XVI + 416 = 432 |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 81 - 932327 - 8 - 1**


# International Conference on Art and Ideology of Dr. N. Subbu Reddiar


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan.**<br>**Dr. S. Ramalingam** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | July, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer Printing at | : | **Prdag Print**<br>476/1, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | XVI + 416 = 432 |
| Prize | : | **Rs. 350/-** |

61. இரா. வாணிபிரபா — 312
ந.சுப்புரெட்டியார் பார்வையில் சகோதரத்துவம்

62. முனைவர். மு. ருக்மணி — 316
ந.சுப்புரெட்டியாரின் உணர்ச்சியின் தத்துவம்

63. வே. அம்சவேணி — 321
ந.சுப்புரெட்டியார் "சைவ சமய விளக்கு" நூலில் சித்தாந்தக் கூறுகள்

64. முனைவர் ச. அரிச்சந்திரன் — 326
ந. சுப்புரெட்டியார் பார்வையில் கவிதைப் படைப்பாக்கம்

65. முனைவர் ஆ. சரவணன் — 331
ந. சுப்புரெட்டியார் பார்வையில் 'அர்ச்சிராகதி'

66. முனைவர். நா. கீதா — 335
அர்த்த பஞ்சக ஞானம்

67. முனைவர் எஸ். குமரன் — 340
ந. சுப்பு ரெட்டியார் உணர்த்தும் தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை

68. முனைவர் த.பிரியா — 345
ந.சுப்புரெட்டியார் உள்ளத் தெருக்களில் உலா வரும் கவிதையனுபவம்

69. மு. ஷாஜஹான் — 350
ந.சுப்புரெட்டியாரின் பார்வையில் ஐந்திணை நெறிகளும் இடந்தலைப்பாடும்

70. இரா. மாலினி — 354
ந.சுப்புரெட்டியார் பார்வையில் பாஞ்சாலி சபதக் கதை மாந்தர்கள்

71. முனைவர் இரா. மணிமேகலை — 359
சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் - நூல் ஆய்வுரை

72. முனைவர் ச. கவிதா — 365
பாரதி இயல் ஆய்வில் பேராசிரியர் ந.சுப்புரெட்டியாரின் பங்களிப்பு

73. முனைவர் கு. முத்துக்குமார் — 370
ந. சுப்புரெட்டியாரின் மெய்யியல் பார்வை

74. வெ. மைதிலி — 376
ந. சுப்புரெட்டியாரின் கவிதைச் சிந்தனைகள்

75. முனைவர் சு. சதீஷ்குமார் — 379
ந.சுப்புரெட்டியார் காட்டும் திருக்கோயில் தத்துவம்

# 71. சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம் - நூல் ஆய்வுரை

**முனைவர் இரா. மணிமேகலை**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முகவுரை

பேராசிரியர் ந. சுப்புரெட்டியாரின் படைப்புகள் பல்வேறு பொருண்மைகளில் நூல்களாக வெளிவந்துள்ளன. சமயம், தத்துவம், இலக்கியம், சமூகவியல், அறிவியல், சிறுவர் இலக்கியம் போன்ற துறைகளில் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதித் தமிழ் ஆய்வுலகிற்குப் பெரும்பங்களிப்பினைச் செய்துள்ளார். தமிழில் வெளியாகியுள்ள நூல்களில் அன்னாரின் படைப்புகள் தனித்துவமான இடத்தைப் பெறுகின்றன. அவற்றுள் பெரும்பாலானவை சமயம் தொடர்பான நூல்கள் என்றாலும் அனைத்துச் சமயங்களுக்கும் அடிப்படை 'சமயங்கடந்த மெய்ப்பொருளே' என்பதையே அவர் தம் தனிப்பண்பாகக் கொண்டுள்ளமையும் அவரது எழுத்துகளின் வழியே அறியலாகிறது. இக் கட்டுரை அன்னாரின் 'சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்' எனும் நூலிற்குரிய ஆய்வுரையை வழங்குவதாக அமைகிறது.

## மெய்யியல் அடித்தளம்

தமிழ் மக்களின் வாழ்வில் சிவமும் தமிழும் பிரிப்பின்றி இருந்துள்ளமை இலக்கியங்களின் வழி காணலாகின்றது. சிவம் என்னும் சொல்லின் அடிப்படைச் சொல்லாகச் செம்மை எனும் தமிழ்ச்சொல் விளங்குகிறது. சங்க நூல் தொடங்கித் தமிழ்ச் சமயத்தில் சைவம் செல்வாக்குடன் திகழ்ந்து வந்துள்ளது. தமிழில் மெய்யியல் தத்துவம் தொடக்க கால சங்க நூல்கள், காப்பியங்கள் ஆகியவற்றின் வழியே வளரலாயிற்று என்றாலும் தமிழ்ச் சைவ மெய்யியலின் அடிப்படை நூல்களாகப் பன்னிருதிருமுறைகளே அமைந்தன. மெய்யியல் என்பது உலகியல் வாழ்வுக்கு வேறான வறண்ட பாலை அல்ல என்ற கொள்கை வலுப்பெற்றது. சாதிமத வேறுபாடின்றித் தமிழ்ச் சைவம் என்ற பெருநிழலின் கீழ் அனைவரும் இணைந்து அறவாழ்வின் அடிப்படையில் இறையின்பத்தைத் துய்த்து வாழலாம் என்ற தெளிவினை உலகிற்கு வழங்கியது.

## சைவசித்தாந்தம்

இந்திய மெய்யியல் மரபில் தனக்கெனத் தனித்துவமான இடமும் பிறதரிசனங்களுக்கான அடித்தளமாகவும் விளங்குவது சைவசித்தாந்தம்